வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

FWC

| தரம் :- 13 (2020) | இந்து நாகரிகம் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. வேதங்களில் முதலில் வைத்தெண்ணப்படும் வேதம்.
1) இருக்கு  2) யசுர்  3) சாமம்
4) அதர்வணம்  5) சதுர்மறை

02. வைணவ ஆகமங்களை எவ்வாறு அழைப்பர்.
1) தந்திரங்கள்  2) சிரௌதம்  3) பிரமாணம்
4) சுப தந்திரம்  5) சங்கிதைகள்

03. பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் என்பவற்றினைக் கூறும் புராணம்
1) ஸ்கந்த புராணம்  2) கருட புராணம்  3) தல புராணம்
4) லிங்க புராணம்  5) கந்த புராணம்

04. ஒற்றைக்கற் கோயில்களில் சிவனுக்குரியது.
1) வீம ரதம்  2) நகுல ரதம்  3) தர்மராஜா ரதம்
4) கணேஷ ரதம்  5) கொற்றவை ரதம்

05. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றிய மார்க்கம்
1) சற்புத்திர மார்க்கம்  2) சக மார்க்கம்  3) மதுர மார்க்கம்
4) சன் மார்க்கம்  5) தாச மார்க்கம்

06. சோழர் காலத்தில் வைணவ குருமாராக விளங்கியவர்கள்.
1) யமுனாச்சாரியார், நாதமுனிவர்  2) இராமானுஜர், மீராபாய்
3) ஈசான பண்டிதர், சர்வசிவ பண்டிதர்  4) தேவரடியார், தலைக்கோலிகள்
5) மத்துவர், ஆண்டாள்

07. வட இந்தியப் பக்தி இயக்கத்தின் முன்னோடியாக விளங்கிய பக்தி நெறியாளர்.
1) மீராபாய்  2) கபீர்தாசர்  3) ஸ்ரீசைதன்யர்
4) இராமானந்தர்  5) துளசிதாசர்

08. "பசியுள்ளவனுக்கு சமயப் போதனை ஆகாது" என்ற கருத்தை முன்வைத்தவர்.
1) சுவாமி விபுலானந்தர்  2) சுவாமி விவேகானந்தர்  3) செந்திநாதையர்
4) இராம கிருஷ்ணர்  5) கா. அருணாச்சலதேசகர்

09. சூரிய வர்மனால் கட்டப்பட்ட அங்கோ வாட் சிவாலயம் அமைந்த இடம்.
1) மலேசியா 2) சம்பா 3) கம்போடியா
4) ஜாவா 5) தாய்லாந்து

10. உலக நாடுகளில் அரச சபைப் புரோகிதர்களை எவ்வாறு அழைத்தனர்.
1) வர்மன் 2) தேவதூதர் 3) அடியவர்
4) தேவராஜ 5) இராஜகுரு

11. "கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு" என சமயத்திற்கும் கலைக்குமான தொடர்பை விளக்கியவர்.
1) கலாயோகி ஆனந்த குமாரசுவாமி 2) சுவாமி விபுலானந்தர்
3) எட்வேட் ரெய்லர் 4) பேராசிரியர் வி.சிவசாமி
5) பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

12. "சிற்பக்கலைக் களஞ்சியம்" என்று போற்றப்படும் ரதக்கோயில்
1) வீம ரதம் 2) நகுல ரதம் 3) தருமராஜ ரதம்
4) சாக தேவ ரதம் 5) வடக்குப் பிடகரி ரதம்

13. பிரமிட் வடிவில் அமைந்த விமானத்தைக் கொண்ட ஆலயம்.
1) கங்கை கொண்ட சோழேஸ்வரம் 2) மூவர் கோயில்
3) ஜராவ தேஸ்வரம் 4) முத்தீஸ்வரர் கோயில் 5) தஞ்சைக் கோயில்

14. நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்களை குறிப்பது.
1) சல விக்கிரகம் 2) அசல விக்கிரகம் 3) சலா சல விக்கிரகம்
4) திருவுருவ விக்கிரகம் 5) மர விக்கிரகம்

15. சங்க காலத்தில் ஐவகைப் பண்களைப் பாடியவர்களை.
1) பரிவாதினி 2) வீணாதரன் 3) தேவாரமுதலிகள்
4) பாணர் 5) ஓதுவார்கள்

16. அத்வைதக் கோட்பாட்டின் திறவு கோலாக அமைந்த நூல்
1) மாண்டுக்கிய காரியை 2) பகவத் கீதை 3) பிரம சூத்திரம்
4) உபநிடதம் 5) வேதம்

17. சங்கரர் பிரமத்தை மாயை மறைப்பதால் தோன்றுவது எதுவென குறிப்பிடுகின்றார்.
1) உலகம் 2) முத்தி 3) ஈஸ்வர தத்துவம்
4) ஆன்மா 5) ஆவரணம்

18. முத்தி நிலையில் கூட ஆன்மா ஈஸ்வரனாவதில்லை என்ற கருத்துக் கொண்டவர்.
1) சங்கரர் 2) மத்துவர் 3) ஸ்ரீகண்டர்
4) இராமனுஜர் 5) பாதராயணர்

19. சைவசித்தாந்தத்தின் முதல் நூலாக கொள்ளப்படுவது.
1) திருவுந்தியார் 2) கொடிக்கவி 3) திருவருட்பயன்
4) சிவஞானபோதம் 5) சிவஞானசித்தியார்

20. "தர்மம் தன்னை மீறியவனைக் கொல்லும் தர்மம் தன்னைப் பாதுகாத்தவனைக் காப்பாற்றும்" என கூறும் நூல்.
1) பகவத்கீதை 2) உபநிடதம் 3) வேதம்
4) திருக்குறள் 5) இதிகாசம்

21. விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு.
1) பிரமயக்ஞம் 2) தேவயக்ஞம் 3) பிதிர்யக்ஞம்
4) பூதயக்ஞம் 5) மானிட யக்ஞம்

22. தென்புலத்தார் என்று வள்ளுவர் யாரை குறிப்பிடுகின்றார்.
1) கற்றவர்கள் 2) குருமார்கள் 3) விருந்தினர்கள்
4) உறவினர்கள் 5) பிதிர்கள்

23. பகவத்கீதை கூறும் கர்மயோகத்தின் பிரதான உபதேசம்
1) ஞானம் 2) பக்தி 3) இல்லற வாழ்வு
4) செயலில் துறவு 5) பிரம்மசரியம்

24. சைவசித்தாந்தம் என்ற சொல் முதன் முதலில் இடம் பெறும் நூல்.
1) திருமந்திரம் 2) திருவிசைப்பா 3) திருவாசகம்
4) திருக்குறள் 5) புராணங்கள்

25. "தர்மபூத ஞானம்" பற்றிக் குறிப்பிட்டவர்.
1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர்
4) பாதராயணர் 5) கௌடபாதர்

26. ஆன்மாக்களின் "சுத்தாவத்தை நிலை" என்பது
1) இருள் நிலை 2) மருள் நிலை 3) தியாக நிலை
4) கடந்த நிலை 5) அருள் நிலை

27. சுவதர்மம் என்ற பாதம் எதனைக் குறித்து நிற்கின்றது.
1) பிறருக்குச் செய்யும் கடமை 2) பெண்ணுக்குரிய கடமை
3) ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை 4) பசுவுக்குச் செய்யும் கடமை
5) குருவுக்குச் செய்யும் கடமை

28. தெய்வ நூல் உலகப் பொதுமறை, தமிழ் மறை என்ற சிறப்பு பெயர்களால் போற்றப்படுவது
1) நல்வழி 2) வேதம் 3) திருக்குறள்
4) ஆத்திசூடி 5) ஆகமம்

29. "கிறிஸ்தவ கண்டன குடாரி" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்
1) சுவாமி விபுலானந்தர் 2) காசிவாசி செந்திநாதையர் 3) கா. அருணாசல தேசிகர்
4) ஆறுமுகநாவலர் 5) பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள்

30. நெய்தல் நிலக் கடவுளாக போற்றப்படுபவர்.
1) விஷ்ணு 2) கொற்றவை 3) முருகன் 4) வருணன் 5) இந்திரன்

31. கர்ப்பக்கிரகத்திற்கு மேல் விசேடமாக அளந்து அமைக்கப்படுவது.
1) பலிபீடம் 2) கோபுரம் 3) பிரகாரம்
4) மூலஸ்தானம் 5) விமானம்

32. சட உலக தோற்றத்திற்கு அடிப்படை பிரகிருதி என குறிப்பிட்டவர்.
1) இராமானுஜர் 2) மத்துவர் 3) சங்கரர்
4) ஞான குரு 5) பாதாரயணர்

33. இருக்கு வேதத்தில் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றிக் குறிப்பிடும் சூக்தம்.
1) வருண சூக்தம் 2) யம சூக்தம் 3) முனி சூக்தம்
4) புருஷ சூக்தம் 5) நாஸதீய சூக்தம்

34. சைவ சித்தாந்தத்தின் படி பிறவிக்கு காரணமாக அமைவது.
1) இறைவன் 2) ஆன்மா 3) ஆணவம்
4) கன்மம் 5) மாயை

35. "பற்றற்ற மனமும் உண்மையான அன்பும் இறைவனை அடையும் வழியாகும்" எனக் குறிப்பிட்டவர்.
1) அருணாசல தேசிகர் 2) காசிவாசி செந்திநாதையர் 3) சுவாமி விவேகானந்தர்
4) ஆறுமுகநாவலர் 5) இராமகிருஷ்ண பரம ஹம்சர்

36. "நிலை பெறுமா றெண்ணுதியே……." என்ற தேவாரத்தின் மூலம் உணர்த்தப்படும் நெறி
1) சரியை நெறி 2) கிரியை நெறி 3) யோகம் நெறி
4) ஞானம் நெறி 5) தியான நெறி

37. நடராஜரை "ஆடவல்லான்" எனப் போற்றியவர்கள்.
1) பல்லவ மன்னர்கள் 2) சோழ மன்னர்கள் 3) நாயக்க மன்னர்கள்
4) பாண்டிய மன்னர்கள் 5) சாளுக்கிய மன்னர்கள்

38. பெண்களது வளமமான வாழ்வு பற்றிக் கூறும் "ஸ்தீரி கர்மாணி" என்ற மந்திரம் இடம் பெறும் வேதம்.
1) இருக்கு 2) யசுர் 3) சாமம்
4) அதர்வணம் 5) தனுர்வேதம்

39. ஈழத்தில் கி.பி 1380 ஆம் ஆண்டளவில் இயற்றப்பட்ட "செகராசசேகரமாலை" என்னும் நூலின் ஆசிரியர்.
1) சபாபதி சோதிடர் 2) இடைக்காடர் 3) சோமசன்மா
4) தன்வந்திரி 5) போசராச பண்டிதர்

40. "சைவ சித்தாந்த மார்கன்" என தன்னை பிரகடனப்படுத்திய பல்லவ மன்னன்.
1) மகேந்திரவர்மன் 2) சிம்வர்மன் 3) பரமேஸ்வர வர்மன்
4) மாமல்லன் 5) இராஜசிம்மன்

❖ **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குரிய பொருத்தமானவற்றை அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>பிரகாமியம் | **F**<br>அவிரோதம் | **K**<br>சாதனம் | **P**<br>பலம் |
| **B**<br>சகலர் | **G**<br>நடராசர் | **L**<br>விஞ்ஞானகலர் | **Q**<br>புராணவிருத்தி |
| **C**<br>விருத்தி | **H**<br>ஈசத்துவம் | **M**<br>கரிமா | **R**<br>பிராப்தி |
| **D**<br>நந்திக்கொடி | **I**<br>சர்க்கம் | **N**<br>முக்தி | **S**<br>திரிமலத்தார் |
| **E**<br>சமன்வயம் | **J**<br>பிரளயாகலர் | **O**<br>வேதவிருத்தி | **T**<br>வம்சம் |

41. அட்டமா சித்திங்கள் அடங்கும் தொகுதி
    1) B, I, L, T  2) D, H, L, S  3) E, F, K, Q
    4) C, H, O, P  5) A, H, M, R

42. மலங்களின் அடிப்படையில் ஆன்மாவின் தன்மை பற்றி விளக்கும் தொகுதி.
    1) B, J, L, S  2) E, I, M, T  3) D, G, N, S
    4) A, F, K, P  5) C, J, L, S

43. புராணங்கள் குறிப்பிடும் தச லட்சணங்கள் அடங்கும் தொகுதி
    1) B, I, M, T  2) C, I, N, T  3) E, H, O, T
    4) D, J, L, Q  5) A, G, M, S

44. சோழர் கால அரசியலுன் தொடர்புடைய தொகுதி
    1) A, J, K, T  2) C, I, L, R  3) E, H, O, T
    4) B, H, O, P  5) D, G, O, Q

45. பிரம சூத்திர நூலோடு தொடர்புடைய தொகுதி.
    1) B, J, K, T  2) C, G, O, R  3) A, H, N, S
    4) D, F, M, P  5) E, F, K, P

❖ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46. மத்துவரின் துவைதத்தில் ஆன்மா
    1) ஆன்மாக்கள் எண்ணிறந்தவை.
    2) கடவுளுக்கு சமமானதல்ல.
    3) முத்தி நிலையில் ஆன்மா ஈஸ்வரனாகும்.
    4) முத்தி நிலையில் ஆன்மாக்களுக்கிடையில் வேறுபாடு உண்டு.
    5) உடலைத் தெரிவு செய்யும் தகைமை ஆன்மாவுக்கு இல்லை

47. சுவாமி விபுலானந்தர்

1) மதங்கசூளாமணி, யாழ் நூல் போன்றவற்றை இயற்றினார்.
2) பிரபோத சைதன்யர் என்னும் பிரமச்சரிய நாமம் உடையவர்.
3) இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.
4) ''முத்தமிழ் வித்தகர்'' எனப் போற்றப்பட்டவர்.
5) மட்டு நகர் காரைதீவில் 1896 பிறந்தார்.

48. மெய்யியல் வளர்ச்சியில் பகவத்கீதை.

1) பிரஸ்தான திரயங்களில் ஒன்று.
2) வேதாந்திகள் பகவத்கீதைக்கு ''கீதா பாஷ்யம்'' என்ற உரை வகுத்துள்ளனர்.
3) அவதாரக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு காரணமானது.
4) விஷ்ணுவின் வியாபக நிலையை விளக்குகின்றது.
5) ஆன்மா அழியும் பொருள் என்பதை உணர்த்துகின்றது.

49. மகா புராணங்கள்

1) தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
2) கோயில் வழிபாடு, உருவ வழிபாடு பற்றிக் கூறுவது.
3) குப்தர் காலத்திற்கு முன் தோற்றம் பெற்றது.
4) இறை நம்பிக்கையை வலுப்படுத்துவன.
5) இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது.

50. இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில்

1) ஈழத்தினை திருமூலர் சிவபூமி என அழைத்தமை.
2) சம்பந்தரும் சுந்தரரும் ஈழத்து திருதலங்கள் மீது பாடல் பாடியமை.
3) கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை.
4) மகாவம்சம் நாக வழிபாட்டோடு சிவலிங்க வழிபாட்டையும் கூறுகின்றது.
5) திருகோணமலையில் கோவில் அமைத்து அதற்கு ''இராஜராஜேஸ்வரம்'' என பெயரிட்டமை.

(50x2=100 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | இந்து நாகரிகம் II | நேரம் :- மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|

## பகுதி – II

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி – I

*01.* *இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் விளக்குக.*

*1)* *வேதங்களின் அமைப்பு*
*2)* *சமய மரபு*
*3)* *தத்துவ மரபு*
*4)* *சமுதாய வழமைகள்*

*(5+5+5+5=20புள்ளிகள்)*

*02.* *தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம் வளம் பெற்றவற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.*

*1)* *அரசியல் சமூக சூழ்நிலை*
*2)* *நாயன்மார்களின் பங்களிப்பு*
*3)* *திருத்தலங்களின் வளர்ச்சி*
*4)* *அரசர்களின் பங்களிப்பு*

*(5+5+5+5=20புள்ளிகள்)*

*03.* *சுவாமி விபுலானந்தார் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் தொடர்பாக மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.*

*1)* *சமயப் பணிகள்*
*2)* *கலைப் பணிகள்*
*3)* *கல்விப் பணிகள்*
*4)* *சமூகப் பணிகள்*

*(5+5+5+5=20 புள்ளிகள்)*

## பகுதி II

*04.* சைவ சித்தாந்தத்தில் ஆணவமலம் பற்றிய கருத்துக்களை விளக்கி ஆராய்க.

*(20 புள்ளிகள்)*

*05.* சோழர் காலக்கட்டடக்கலை வளர்ச்சியில் மன்னர்களின் பங்களிப்பை விளக்குக.

*(20 புள்ளிகள்)*

*06.* இலங்கையிலே பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி நிலையினை பரிசீலனை செய்க

(20புள்ளிகள்)

*07.* இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளையும், சாதனைகளையும் விளக்குக.

(20புள்ளிகள்)

*08.* அத்வைத கோட்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்கி கூறுக.

*(20 புள்ளிகள்)*